[1981 ஏப்ரல் 2

வாகைக்குளம் துப்பாக்கிச் சூட்டால் மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதி உதவி.

*வினா எண் 593—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாகைக்குளம் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4-ம் நாள் துப்பாக்கிப் பிரயோகத்தால் மரணமடைந்த பாக்கியத்தம்மாள், முத்துவேலம்மாள் ஆகியோரின் குடும்பங்களுக்கும் மற்றும் அவர்களுடன் துப்பாக்கிச் சூட்டில் மரணமடைந்தவர்களது குடும்பங்களுக்கும் நிதியுதவி அளிக்கப்பட்டதா ?

(ஆ) இல்லையெனில் நிதியுதவி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பாக்கியத்தம்மாள் முத்துவேலம்மாள் ஆகியோர் துப்பாக்கிச் சூட்டினால் மரணம் அடைந்திருக்கிறார்கள். அதோடு அந்தக் குடும்பத்திலுள்ள பெரியவர்களும், கைக்குழந்தைகள் எல்லாம் இந்த துப்பாக்கிச் சூட்டில் மரணம் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த வாகைக்குளம் துப்பாக்கிச் சூட்டின் காரணமாக முத்துவேலு என்பவர் மரணமடைந்தார். அவருடைய வாரிசான திருமதி பூரணம்மாளுக்கு நிவாரண நிதி ரூ. 5,000 வழங்கப்பட்டிருக்கிறது. அரசு என்பவர் இறந்துபட்டார். அவருடைய வாரிசான திருமதி பத்ரகாளியம்மாளுக்கு ரூ. 5,000 அளிக்கப்பட்டிருக்கிறது சக்கரைத் தேவர் என்பவர் இறந்திருக்கிறார். அவருடைய வாரிசான திருமதி அரியனாட்சிக்கு ரூ. 5,000 நிவாரணத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. பாக்கியம் என்பவர் இறந்து, அவருடைய வாரிசாகக் கருதப்பட்ட திரு. வேலுத் தேவருக்கு ரூ. 5,000 நிவாரணத் தொகை அளிக்கப்பட்டிருக்கிறது. அதே போல் புலியடியான் என்பவர் இறந்து, திருமதி மீனாள் என்கிற அவருடைய வாரிசுக்கு ரூ. 5,000 நிவாரணத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த துப்பாக்கிச் சூட்டில் ஒரு குழந்தையும் இந்த வகையில் மரணம் அடைந்ததாக செய்தி பத்திரிகையிலே வந்தது. அந்தக் குழந்தையின் குடும்பத்திற்கும் நிதி உதவி அளிக்கப் பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாகைக்குளம் துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்தவர்கள் எத்தனை பேர்கள்? அவர்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த பொது மக்கள் 19 பேர்கள். இந்த 19 பேர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 வீதம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அளிக்கப்பட்டிருக்கிறது. இதிலே காவல் துறையைச் சேர்ந்தவர்கள் 23 பேர்கள் காயமடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் ஆயிரம் ஆயிரம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகைக்குளத்தில் ஆழ்கிணறு தோண்டி கடலாடிக்கு தண்ணீர் கொண்டு வருவது சம்பந்தமாகத்தான் இந்த சம்பவம் நடைபெற்றது. எனவே, அந்தத் திட்டத்தை இப்போது அரசாங்கம் கைவிட்டதா? அல்லது இன்னும் பரிசீலித்துக்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. பொது மக்களுடைய முழு ஒத்துழைப்பும், முழு ஆதரவும் பெற்றதற்குப் பிறகு, அதுபற்றி அரசு முடிவு செய்யும்.

[முற்பகல் 9-10]

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர்களை, குறிப்பாக தென் காசிப் பகுதியில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த வினா வாகைக் குளத்தைப் பற்றியது.